# மயிலாடுதுறை நகராட்சி

**2020–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28–ஆம் தேதி வெள்ளிக்கிழமை**
**மாலை 3.30 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.**
**முன்னிலை:– திரு. சோ. புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை.,**
**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர்**
**மயிலாடுதுறை நகராட்சி**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| **28.02.2020** | **1)** மயிலாடுதுறை நகராட்சி ஆணையரின் **2020–ம்** ஆண்டு ஜனவரி மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.730**<br>**பதிவு செய்யப்பட்டது.** |
| **28.02.2020** | **2)** மயிலாடுதுறை நகராட்சி பொறியாளர் **2020–ம்** ஆண்டு ஜனவரி மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.731**<br>**பதிவு செய்யப்பட்டது.** |
| **28.02.2020** | **3)** மயிலாடுதுறை நகராட்சி நகர்நல அலுவலர் **2020–ம்** ஆண்டு ஜனவரி மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.732**<br>**பதிவு செய்யப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| **28.02.2020** | **4)** மயிலாடுதுறை நகராட்சி பகுதியில் அரசு மருத்துமனை இயங்கி வருகிறது. இம்மருத்துவமனையில் சுமார் **400** படுக்கைகள் கொண்ட உள்நோயாளிகள் தங்கி மருத்துவம் பெற்று வருகிறார்கள். மேற்கண்ட உள்நோயாளிகளுடன் உடன் வரும் உதவியாளர்கள் தங்குவதற்கு வசதியாக சிறப்பு கட்டிடம் கட்டுவதற்கு (Special Shelter) மாவட்ட ஆட்சித்தலைவர், நாகப்பட்டினம் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.<br><br>அதன்படி மயிலாடுதுறை பெரியார் அரசு மருத்துவமனையில் நோயாளிகளுடன் வரும் உதவியாளர் சுமார் **50** நபர்கள் தங்குமிடம் **3400.00** சதுர அடி பரப்பளவில் கட்ட ரூ.**72.00** இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணி மேற்கொள்ள அனுமதி வேண்டி நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை-**28** அவர்களுக்கு கருத்துரு சமர்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். **0531/2020/இ1** | **தீர்மான எண்.733 அனுமதிக்கப்பட்டது.** |
| **28.02.2020** | **5)** இந்நகராட்சி புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு RFQ (Request For Qualification) கோரும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தேசிய ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் விளம்பரம் செய்ய இயக்குனர் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை, சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக ந.க.எண்.**4812/2016/இ1** நாள்.**29.01.2020**–ல் விளம்பரம் செய்ய தெரிவித்தன் பேரில் Mark Media Communication அவர்கள் கடிதம் எண்.**4812/2016/இ1** நாள்.**17.02.2020**–ல் Financial Express(All Edition) மற்றும் தினசெய்தி செய்தித்தாளில் **31.01.2020** அன்று விளம்பரம் செய்யப்பட்டதற்கு பட்டியல் ரூ.**75790/–** (எழுபத்தி ஐந்தாயிரத்து எழுநூற்று தொண்ணூறு மட்டும்) வழங்க கோரி மார்க் மீடியா மேலாளரின் **29.01.2020**ம் தேதிய DIPR 632/TENDER/2020 கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே செலவினத்திற்கும் மேற்படி தொகை பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். **4812/2016/இ1** | **தீர்மான எண்.734 அனுமதிக்கப்பட்டது.** |

<table>
<tr>
<td>28.02.2020</td>
<td>
6) இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–2019 ன் கீழ் 18 எண்ணிக்கை BOV (Battery Operated Vehicle) வாங்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் விளம்பரம் செய்ய இயக்குனர் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை, சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக ந.க.எண்.1634/2018/இ1 நாள்.08.01.2020–ல் விளம்பரம் செய்ய தெரிவித்தன் பேரில் Accord Advertising Agencies அவர்கள் கடிதம் எண்.1634/2018/இ1 நாள்.15.01.2020–ல் Bussiness Standard மற்றும் மக்கள் குரல் செய்தித்தாளில் 11.01.2020 அன்று விளம்பரம் செய்யப்பட்டதற்கு ஊடக மேலாளரின் 10.01.2020ம் தேதிய DIPR/513/TENDER/2020 கடிதத்துடன் பட்டியல் ரூ.36855/– (முப்பத்தி ஆறாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தி ஐந்து மட்டும்) வழங்க கோரி உள்ளார்கள். எனவே மேற்கண்ட செலவினத்திற்கும் மேற்படி தொகை பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம்.<br><br>
ந.க.எண். 1634/2018/இ1
</td>
<td>தீர்மான எண்.735<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>28.02.2020</td>
<td>
7) மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் திட்ட நிதியின்கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 14.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ.<br>ண்</th><th>வேலையின் விபரம்</th><th>ஒப்பந்த மதிப்பு ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள்</th><th>மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம்</th><th>குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்</th></tr>
<tr><td>1</td><td>2</td><td>3</td><td>4</td><td>5</td><td>6</td></tr>
<tr><td colspan="6">டிநீர் திட்ட நிதி 2019-20</td></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">மயிலாடுதுறை நாகராட்சிக்கு குடிநீர் பராமரிப்பு பணிக்கு மாவட்ட ஆட்சியரின் ஊதிய விகிதத்தில் பணியாளர்கள் வழங்குதல்.</td><td rowspan="2">7,00,000/-</td><td>திரு. K. செந்தில், மயிலாடுதுறை.</td><td>மதிப்பீட்டு அளவு</td><td rowspan="2">திரு. K. செந்தில், மயிலாடுதுறை</td></tr>
<tr><td>திரு. E. கண்ணன், மயிலாடுதுறை.</td><td>ரூ.585600.00/– (+)1.67% அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலககுறிப்பு :</u><br>
1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br><br>
ந.க.எண். 0222/2020/இ1
</td>
<td>தீர்மான எண்.736<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| **28.02.2020** | **8)** மயிலாடுதுறை நகராட்சி பொது நிதியின்கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 14.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.737 அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது** |

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| பொது நிதி **2019-20** | | | | | |
| 1. | மயிலாடுதுறை நகராட்சி – நகராட்சி பொறியாளர் குடியிருப்பினை சீர்செய்து பராமரிக்கும் பணி. | 2,50,000/- | திரு. K. செந்தில், மயிலாடுதுறை. | ரூ. **220091.00/– (–) 0.27%** குறைவு | திரு. K. செந்தில், மயிலாடுதுறை. |
| | | | திரு. E. கண்ணன், மயிலாடுதுறை. | ரூ.**221994.00/– (+)0.59%** அதிகம் | |

<u>அலுவலககுறிப்பு</u> :

1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: **6**ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.** 0225/2020/இ1

| | | |
|---|---|---|
| 28.02.2020 | **9)** மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் குடியிருப்பு வளாகத்தில் கூடுதல் பராமரிப்பு பணியாக Pathway alround Building, Shed for Front and Near side of building, Safety Gate in rear side etc., போன்ற பணிகள் மேற்கொள்ள தேவையான மதிப்பீட்டு தொகை ரூ.4,60,000/- (ரூபாய் நான்கு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) ஆகும். இதனை நகராட்சியின் பொது நிதி 2019-20கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 5503/2019/இ1 | தீர்மான எண்.738 அனுமதிக்கப்பட்டது |
| 28.02.2020 | **10)** மயிலாடுதுறை நகராட்சி புது அலுவலக கட்டிடம் முதல் தளம் கட்டுமான பணி முடிவடைந்து தனித்தனி துறை / பிரிவு அலுவலர்களுக்கான Computer Wiring work, UPS Connection போன்ற பணிகள் மேற்கொண்டு அப்பகுதிக்கு பொறியியல் மற்றும் இதர பிரிவுகள் இடமாற்றம் செய்ய வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவீனம் ரூ.2.70 இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சியின் பொது நிதி 2019-20 இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 096/2020/இ1 | தீர்மான எண்.739 அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது |
| 28.02.2020 | **11)** இந்நகராட்சியின் மூலம் விநியோகிக்கப்படும் குடிநீரின் தரத்தினை இளநிலை பகுப்பாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தஞ்சாவூர் அவர்களிடமிருந்து பிரதி மாதமும் ஆய்வு செய்து அறிக்கை பெற்றிட ஆண்டொன்றிற்கு (மார்ச் - 2020 முதல் பிப்ரவரி - 2021 வரை) ஆகும் உத்தேச செலவீனம் ரூ.60,000/- (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் இருந்து அவ்வப்போது ஆய்வகங்களுக்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 5961/2010/இ2 | தீர்மான எண்.740 அனுமதிக்கப்பட்டது |

28.02.2020

12) மயிலாடுதுறை நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2019-2020ன் கீழ் சாலைகள் பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. அதுசமயம் மயிலாடுதுறையை சார்ந்த வர்த்தக சங்கத்தின் அமைப்பினர் WP.No.1963 of 2020 சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்கள். மேற்கண்ட வழக்கிற்கு திரு.M.வேணுகோபால், அரசு வழக்கறிஞர் சென்னை அவர்களை வாதாடுவதற்கு நியமனம் செய்யப்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கிற்கான வழக்கறிஞர் கட்டண தொகை ரூ.15,000/-ஐ (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) இந்நகராட்சியின் பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 0648/2020/இ1

தீர்மான எண்.741
அனுமதிக்கப்பட்டது

---

28.02.2020

13)இந்நகராட்சி பொது சுகாதாரம் பிரிவு TN.51.S.3558, TN.51.P.3556 கனரக வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு பழுது நீக்க பணிகள் செய்திட 28.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டதில் கீழ்காணும் விபரங்கள்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலையின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் | விலை விபரம் |
|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி பொது சுகாதாரம் பிரிவு பராமரிப்பில் உள்ள TN.51.S.3558, TN.51.P.3556 என்ற எண்ணுள்ள கனரக வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறுவதற்கான பழுது நீக்க பணிகள் | 1. குரு ஆட்டோ கார்ட்டேஸ், நாகை ரோடு, தஞ்சாவூர். | ரூ.76000/– |
| | | 2. பாப்புலர் ஆட்டோ கேர், 6, அரசு மருத்துவமனை ரோடு, மயிலாடுதுறை | ரூ.74500/– |

மேற்கண்ட இரண்டு ஒப்புந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் உள்ள பாப்புலர் ஆட்டோ கேர், மயிலாடுதுறை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளது ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : 1. மயிலாடுதுறை பாப்புலர் ஆட்டோ கேர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்காலம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3843/2019/எச்1

தீர்மான எண்.742
அலுவலக குறிப்பு
ஏற்று
அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 28.02.2020 | **14)**மயிலாடுதுறை நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள கூசூ.82.A658 எண்ணுள்ள ஈப்பு வாகனத்தின் சிலிண்டர் பழுதாகிவிட்டதால் புதிய சிலிண்டர் வாங்கி பொருத்த வேண்டியுள்ளதால் அதற்கான செலவினத்தொகை ரூ.2050/—ஐ (ரூபாய் இரண்டாயிரத்து ஐம்பது மட்டும்) இந்நகராட்சியின் குடிநீர் திட்ட நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.0435/2020/இ1 | **தீர்மான எண்.743 அனுமதிக்கப்பட்டது.** |